சிசி.33/2021 அ.சா.2 சிரில் பிரகாஷ்

01.08.2022 - (சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடரப்படுகிறது)

எங்களை எதிரி பணத்தை தந்துவிட்டு போ என்று மிரட்டியதால் உடனே வாதி சங்கர் அவர்களிடம் என்ன செய்யலாம் என்று கேட்டோம். வாதியும் வேறு வழியில்லை என்பதால் நான் பத்திரம் எழுதிக்கொடுக்கிறேன் என்று சொன்னார். மேலும் நான் பத்திரம் எழுதிக் கொடுக்கிறேன். ஆனால் அவர் எனக்கு எதிரி பவர் தரவேண்டும் என்று வாதி கூறினார். உடனே எதிரி 100 ரூபாய் பத்திரம் ஒன்று வாங்கிக் கொண்டு வந்தார். அதில் தான் பவர் எழுதிவிட்டதாகவும் கூறி சப் ரெஜிஸ்டர் ஆபிசில் மேஜையில் பத்திரத்தை வைத்தார். வாதியும் அதில் பவர் எழுதப்பட்டுள்ளதாக நம்பி சொத்தை கிரையம் தயாரித்து அதில் கையொப்பமிட்டு எதிரி பெயருக்கு கொடுத்தார். கையெழுத்தை போட்டுவிட்டு எதிரி பவர் செய்து கொடுத்ததாக உள்ள பத்திரத்தை பார்க்கும்போது அதில் வாதி பெயருக்கு பவர் எழுதப்படவில்லை. உடனே வாதி சார்பதிவாளரிடம் எதிரி ஏமாற்றிதை கூறி பத்திரத்தை கேன்சல் செய்யும்படி கூறினார். அதற்கு சார்பதிவாளர் நான்கு நாட்கள் சமயம் தருகிறேன். அதற்குள் நீங்கள் நீதிமன்றத்திற்கு போங்கள் பத்திரத்தை கேன்சல் செய்யமுடியாதென்று சொன்னார். வாதி வேறு வழியின்றி வழக்கறிஞர்களை சந்திப்பதாக சொன்னார். நானும் சுரேஷ் என்பவரும் வாதியிடம் நீங்கள் வாங்கிய U:/3.45.000-?j;ij எப்படியாவது புரட்டி ரெடி பண்ணுங்கள் அதுவரை எதிரி சொத்தை ஒன்றும் செய்யமாட்டார் என்று சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம்.

அதன்பின்னர் எந்த பிரச்சனையும் இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. பின்னர் எதிரி அருள்தாஸ் கேத்தி காவல்நிலையத்தில் ஒரு புகார் மனுவை கொடுத்தார். அந்த புகாரில் வாதி எழுதிக்கொடுத்த சொத்து தனக்குரியது என்றும் அதில் வாதியும் அவரது மகனும் தேயிலை பறிக்க அனுமதிக்காமல் தடுக்கிறார்கள் என்று புகார் கொடுத்தார். அப்போது அங்கிருந்த காவல் ஆய்வாளர் அன்னராஜ் என்பவர் சங்கரையும் அவரது மகனையும் கூப்பிட்டு விசாரித்தார். நடந்த விவரத்தை வாதி ஆய்வாளரிடம் கூறினார். ஆய்வாளர் அதற்கு வாதியிடம் நீங்கள் எப்படியாவது பணத்தை ரெடி பண்ணி கொடுங்கள் அதுவரையும் அவர்கள் தேயிலை பறித்துக் கொள்ளட்டும் என்று கூறி அனுப்பி வைத்தார்.

பின்னர் எதிரி வாதியிடம் தான் வீட்டு வேலை செய்து வருவதாகவும் வட்டியை கொடுக்கவேண்டும் என்று கேட்டதால் வாதி எதிரி அருள்தாசுக்கு ரூ.30,000/- வட்டியாக கொடுத்தார். அதற்கு எதிரியும் ரூ.30000/- பெற்றுக்கொண்டதற்கான ரசீது ஒன்றை கைப்பட எழுதினார். பின்னர் மேற்படி சொத்தை எதிரி ராஜேந்திரன் என்பவருக்கு ரூ.25 லட்சத்திற்கு விலை பேசி ரூ.2 லட்சம் அட்வான்ஸ் வாங்கினார். எதிரி அருள்தாசுக்கு மேற்படி ராஜேந்திரனை நான் தான் இந்த சம்பவத்திற்கு சில காலங்களுக்கு முன்பாக அறிமுகப்படுத்தி வைத்திருந்தேன். அதனால் மேற்படி ராஜேந்திரனிடம் நான் நடந்த விவரத்தை சொன்னதால் அவர் வில்லங்கமான சொத்தை நான்

வாங்கமாட்டேன் என்று கூறி திரும்ப சென்றுவிட்டார். பின்னர் எதிரி மேற்படி சொத்தை விஜயகுமார் என்பவருக்கு சொத்தை பொறுத்து ரூ.16 லட்சத்திற்கு கிரையம் செய்துவிட்டார்.

உடனே வாதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலிருந்து ஒரு உத்தரவு ஒன்றை வாங்கிக்கொண்டு கேத்தி காவல்நிலையத்திற்கு வந்து ஒரு புகார் ஒன்றை அளித்தார். கேத்தி காவல்நிலையத்தார் சம்பவம் குன்னூரில் நடைபெற்றது என்பதால் குன்னூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச் சொன்னார்கள். நானும் சுரேஷ் என்பவரும் வாதியுடன் குன்னூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு தாமோதரன் என்ற உதவி ஆய்வாளர் இருந்தார். அப்போது அங்கிருந்த உதவி ஆய்வாளர் தாமோதரன் என்னிடமும் சுரேசிடமும் நடந்த சம்பவத்தை எழுதிக் கொடுங்கள் என்று எழுதி வாங்கிக் கொண்டு வாதியிடம் ஒரு ரசீதில் கையெழுத்து கேட்டார். அப்போது அது வெறும் ரசீதாக இருக்கிறதே ஒன்றும் எழுதவில்லையே என்று வாதி கேட்டபோது எதிரியை கைதுசெய்து நீதிமன்றத்தில் கொடுக்கவேண்டிய ரசீது தான் என்று சொல்லி கையெழுத்து வாங்கினார். பின்னர் அந்த நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட உத்தரவின்படி விசாரித்த ஆய்வாளர் அந்த வழக்கில் உண்மையில்லை என்று சொல்லி தள்ளுபடி செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

பின்னர் வாதி மாவட்ட நீதிமன்றத்தில் முறையிட்டும் தற்போது இந்த வழக்கு வந்திருப்பதாக அறிந்தேன். பின்னர் இதுசம்பந்தமாக உதகையில் நிலஅபகரிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர், ஆய்வாளர் ஆகியோர்கள் என்னை விசாரித்தனர். நான் இங்கு சொன்னதை அவர்களிடமும் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் என்ன தொழில் செய்கிறேன் என்று கேட்டால் தற்போது மார்க்கட்டிங் தொழில் செய்கிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழல் செய்து வருகிறீர்களா என்று கேட்டால் இல்லை. வாதியை எதிரிக்கு அறிமுகப்படுத்தியத நான் தான் என்று கேட்டால் வாதியை எனக்கு குணசேகரன் என்பவர் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் நான் வாதியை எதிரிக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன்.

நான் இந்த வழக்கு சம்பவ காரண காரியங்களின் போது அனைத்திலும் உடனிருந்தேன் என்று சொன்னால் சரிதான். வாதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலிருந்து உத்தரவு வாங்கி கொண்டு வந்த பின்புதான் முதல்முதுலாக எதிரி மீது புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. முதல் புகார் எப்போது கொடுத்தார் என்று கேட்டால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்று கேட்டால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் எனக்கு எழுத படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.9 ஆவணத்தில் எனது கையெழுத்து உள்ளதா என்று கேட்டால் சாட்சி கையெழுத்து நான் போட்டுள்ளேன். அ.சா.ஆ.9 கிரைய பத்திரம் என்று சொன்னால் சரிதான். பத்திரத்தை ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டார் என்று எனக்கு எப்போது தெரியும் என்று கேட்டால் அருள்தாஸ் கேத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து தனது சொத்து என்று சொல்லும் போதே

வாதியை எதிரி ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படுகிறார் என்பதை தெரிந்துகொண்டேன்.

வாதி எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்பு அங்கு சுமார் எவ்வளவு நேரம் நானும் வாதியும் இருந்திருப்போம் என்று கேட்டால் சுமார் ஒரு மணிநேரம் இருந்தோம். வாதி வழக்கறிஞரை பார்க்க தனியாக சென்றாரா உடன் நானும் சென்றேனா என்று கேட்டால் அவர் மட்டும் சுமார் 15, 20 நிமிடத்தில் வழக்கறிஞரை பார்க்க சென்றுவிட்டார். எதிரி வாதி மீது கேத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது கிரையம் முடிந்த 4 மாதம் இருக்குமா என்று கேட்டால் இருக்கலாம் அதிகமாக இருக்கும். நான் எதிரியிடமிருந்து வாதிக்கு சொத்து பரிமாற்றம் செய்ததற்கு எவ்வளவு கமிஷன் பெற்றீர்கள் என்று கேட்டால் ரூ.3500/- பெற்றேன்.

**நீதிமன்ற கேள்வி** - நீங்கள் கமிஷனாக பெற்ற ரூ.3500/- சொத்தை கிரையம் கொடுத்த வகையிலா அல்லது வாதிக்கு எதிரியிடமிருந்து வட்டிக்கு வாங்கி கொடுத்த வகையிலா?

**சாட்சியின் பதில்** - நான் வாதிக்கு எதிரியிடமிருந்து வட்டிக்கு பணம் வாங்கிக் கொடுக்கும் போது அதற்கு கமிஷனாக ரூ.3500/- பெற்றேன்.

பணம் எனக்கு ரூ.3500/- கமிஷன் யார் தந்தார்கள் என்று கேட்டால் சங்கர் அவர் பணத்தை எடுத்துவிட்டு மேஜையில் வைத்ததை நாங்கள் எடுத்துக் கொண்டோம். நாங்கள் எதிரியிடமிருந்து வாதிக்கு ரூ.3,45,000/-த்தை வட்டிக்கு வாங்கி கொடுத்தோம். அந்த ரூ.3,45,000/- ரூபாயில் தான் ரூ.3500/- எனக்கு கமிஷனாக கொடுத்தார்கள்.

15.02.2008ம் தேதியன்று சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்பு வைத்து நானும் சுரேசும் சேர்ந்து சங்கரை திட்டி மிரட்டியதாக தனது சாட்சியத்தில் கூறியுள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் சேர்ந்து தான் வலுக்கட்டாயமாக சொத்தை எழுதிக்கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. வாதியை கழுத்தை பிடித்து மிரட்டி நீ சொத்தை எழுதி கொடுக்காமல் போகமுடியாது என்று எதிரி, அவரது மனைவி, சுரேஷ் மற்றும் நானும் சேர்ந்து எதிரியை ஏசியதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்கும்போது பவர் பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்று கேட்டால் வாதி பவர் எழுதி கேட்டார். ஆனால் அவர்கள் பவர் எழுதிக்கொடுக்காமல் வேறு மாதிரி எழுதிக் கொடுத்தார்கள். இந்த கிரைய பத்திரம் செய்யும் போது சுரேஷ் எங்களுடன் இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவரும் கிரையம் முடியும் வரை உடனிருந்தார் என்று சொன்னால் சரிதான்.

நான் எப்போது காவல்நிலையம் சென்றேன் என்று கேட்டால் என்னை ஊட்டியில் நில அபகரிப்பு பிரிவில் ஒருமுறை விசாரித்தார்கள். பின்னர் குன்னூர் காவல்நிலையத்திலும் ஒருமுறை விசாரித்தார்கள். கிரையம் செய்து கொடுத்த பின்பு எவ்வளவு நாள் கழித்து என்னை காவல்நிலையத்தில் விசாரித்தார்கள் என்று கேட்டால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. சுமார் 3 மாதம் இருக்குமா 6 மாதம் இருக்குமா 2 வருடம் இருக்குமா என்று கேட்டால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 2 வருடம் இருக்குமா என்று கேட்டால் அதுவும் ஞாபகமில்லை. எனக்கு

ஞாபகமிருக்கிறதென்றும் பொய் சொல்வதற்காக ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை கிரையம் செய்து கொடுத்த தேதி என்னவென்று கேட்டால் 13.02.2008இல் கிரையம் செய்து கொடுத்தார். நான் கிரையம் செய்து கொடுத்த தேதி எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால் காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்த தேதி ஞாபகமில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் நான் ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எனது முன்னிலையில் சரியான முறையில் வாதி எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றும் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கமிஷன் தொகை தராததால் தான் வாதிக்கு சாதகமாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிக்கு ஒரு வீட்டை கிரையம் வாங்கி கொடுத்துள்ளேன். அதற்கே அவர் எனக்கு கமிஷன் தரவில்லை. அப்போதும் நான் வழக்கு கொடுக்கவில்லை. எனக்கு தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததால் எதிரியை பழிவாங்கும் நோக்கத்துடன் சாட்சியளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குன்னூர் காவல்நிலையத்தில் நான் தற்போது நீதிமன்றத்தில் சொல்லும் சங்கதிகளை தான் எழுதிக்கொடுத்தேன்.

பத்திரம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டதென்று கேட்டால் விஜயகுமார் என்ற பத்திர எழுத்தரின் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. நான். சங்கர், சுரேஷ், குணசேகரன் மற்றும் எதிரி ஆகியோர் அங்கு இருந்தோம். அந்த அலுவலகத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தோம் என்று கேட்டால் சுமார் ஒரு மணிநேரம் இருந்தோம். பின்னர் சார்பதிவாளர் அலுவலகம் வந்துவிட்டோம். சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒருமணிநேரம் இருந்தோம். பதிவு எப்போது நடைபெற்றது என்று கேட்டால் மாலை சுமார் 03.30 மணியிலிருந்து 04.30 மணிக்குள்ளாக இருக்கலாம்.

நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எதிரி வாதியிடமிருந்து ஏமாற்றி சொத்தை வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சரியான பணம் கொடுத்து தான் எதிரி வாதியிடமிருந்து சொத்தை பெற்றுள்ளார் என்றும் அதில் எனக்கு கமிஷன் தராததால் நான் பொய்யாக சா்டசியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் போலிசாரிடம் ஸ்டேட்மெண்ட் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/K.இசக்கி மகேஷ்குமார்

நீதித்துறை நடுவர், குன்னூர்.